


கடல்வழி வணிகத்தை ஊக்குவிக்க வேண்டியது தலையாய கடமை என்று சென்னையில் நடைபெறுகின்ற நீலப் பொருளாதார மாநாடு 2025–ஐ தொடங்கி வைத்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார். இந்த நீலப் பொருளாதார மாநாட்டில், சென்னை மற்றும் காமராஜர் துறைமுக ஆணையத்தின் தலைவர் சுனில் பாலிவால், IAS., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ் IAS., தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர் / துணைத்தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், IAS., இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில துணைத்தலைவர் C.தேவராஜன் மற்றும் துறைமுக மேம்பாட்டாளர்கள், துறைமுக நிர்வாகிகள், துறைமுக பயனீட்டாளர்கள், கடல்சார் சுற்றுலா சார்ந்த செயல்பாட்டாளர்கள், மீன்வள மற்றும் மீன்வளர்ப்புத் துறை சார்ந்த வல்லுனர்கள், கப்பல் கட்டுதல், பழுதுபார்த்தல் துறை வல்லுநர்கள், இந்த மாநாட்டு கருத்தரங்கிற்கு வந்திருக்கும், பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்கள், கடல்சார் வாரிய அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## தலைவர் கலைஞர் பெற்ற அதே பெரியார் விருதைப் பெற்றிருக்கிறேன்!

# என் ஒரே கனவை நிறைவேற்றிய கழகத் தலைவர் - முதல்வர் தளபதிக்கு நன்றி!

### கழக முப்பெரும் விழாவில் – துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

கரூர், செப். 19-

**என் ஒரே கனவை நிறைவேற்றிய கழகத் தலைவர் முதலமைச்சசருக்கு நன்றி... நன்றி... நன்றி! என்று திமுக முப்பெரும் விழாவில் பெரியார் விருது' பெற்ற துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உருக்கத்துடன் உரையாற்றினார்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழா 2025, செப்டம்பர் 17 ஆம் தேதியன்று கரூர் புறவழிச் சாலைகோடங்கிபட்டியில் நடைபெற்றது.

இவ்விழாவில் விருது பெற்றவர்கள் சார்பாக பெரியார் விருது பெற்ற துணைப் பொதுச் செயலாளரும் நாடாளு மன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.

அப்போது அவர், குறிப்பிட்டதாவது :-

"ஆங்கிலத்திலே ஆல் ரோட்ஸ் லீட் டு ரோம் என்று சொல்லுவார்கள். இன்று இந்தியாவின் பார்வையையே கரூருக்கு திருப்பி இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களே... துணை முதல்வர் உதயநிதி அவர்களே... கழகத்தின் பொருளாளர் அவர்களே, முதன்மை செயலாளர் அவர்களே, துணை பொதுச்செயலாளர்களே... அமைப்புச் செயலாளர்களே...



இவ்வளவு பிரம்மாண்டமான இந்த முப்பெரும் விழா கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கக் கூடிய கரூர் மாவட்ட கழக செயலாளர் செந்தில் பாலாஜி அவர்களே, அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே... சட்டமன்ற உறுப்பினர்களே, மாவட்ட கழகத்தின் செயலாளர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அத்தனை நிலைகளில் இருந்தும் தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு பகுதிகளில் இருந்து இந்த நிகழ்ச்சிகளை கலந்து கொண்டிருக்கக் கூடிய சகோதர சகோதரிகளே...

தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகளே... இன்று மேடையிலே விருதுகளை பெற்றிருக்கக்கூடிய கழகத்திற்காக தன் வாழ்நாளெல்லாம் உழைத்திருக்கக்கூடிய அத்தனை பெரியவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒரு கனவு இருக்கும். எனக்கு இருக்கக்கூடிய ஒரே கனவு... அது தலைவர் கலைஞர் அவர்கள் பெற்ற அதே விருதை பெரியார் விருதை இன்று பெற்றிருக்கிறேன். அதை நிறைவேற்றித் தந்திருக்கக்கூடிய என்னுடைய முதலமைச்சர், கழகத்தின் தலைவர், அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய நன்றி, நன்றி, நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொட்டக்கூடிய மழையிலும் இங்கே நின்று கொண்டிருக்கக்கூடிய உடன்பிறப்புகளை பார்க்கும் பொழுது இந்தப் படை போதுமா...

எந்தத் தேர்தலையும் எந்த பகைவர்களாக இருந்தாலும், அது நம்முடைய பரம்பரை பகைவர்களாக இருக்கட்டும்... பாரம்பரிய பகைவர்களாக இருக்கட்டும்... புதிதாக வரக்கூடியவர்களாக இருக்கட்டும்... அத்தனையையும் வென்று காட்டுவோம்... வென்று காட்டுவோம் என்று சூளுரைக்கக் கூடிய இந்த படை போதும்! வெற்றி நிச்சயம்" என்று உரையாற்றினார்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.




